**கொழும்பு பல்கலைக்கழகம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 107 (5) ஆவது உபபிரிவு மற்றும் 18 ஆவது பிரிவின்கீழ் கையளிக்கப்பட்டுள்ள 1980 ஆம் ஆண்டு 01 ஆம் இலக்க கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஒழுங்குவிதிகளில் 20 ஆவது பிரிவு மற்றும் பல்கலைக்கழக சட்டத்தில் 108(1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்களைத் தவிர்ந்து பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் வேலைகளை முடிவுறுத்தப்பட்டு 05 மாதங்கள் தொடக்கம் 11 மாதங்கள் முடிவடைந்திருந்த 05 கருத்திட்டங்களின் மொத்த பெறுமதி ரூபா. 19,627,090ஐ மேலும், மேற்கொள்கின்ற வேலைகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன், 04 கருத்திட்டங்களின் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா.13,554,963 ஐ கணக்கு வைக்கப்படவில்லை. | 2019 திசெம்பர் 31 திகதியில் கருத்திட்டம் முடிவுறுத்தியுள்ளதாக வேலை முடிவுறுத்தும் சான்றிதழ் கணக்கு பிரிவிடம் கிடைக்கப்பெறாமையால், மேற்கொள்கின்ற வேலை கணக்கில் சேமித்து வைத்துள்ளதுடன், ஒப்பந்த அளிப்பு பெறுமதி மற்றும் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் மேற்கொண்டுள்ள செலவு என்பவற்றுக்கிடையிலான வேறுபாடு, செலுத்தப்பட வேண்டிய கணக்கு வைக்கப்படாத மீதியுடன் இணங்கவில்லை. | வேலைகள் முடிவுறுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதியில் செலுத்தப்பட வேண்டிய பெறுமதிகளை செவ்வையாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ)கட்டிடங்களின்கீழ் மூலதனமயப்படுத்திய ரூபா. 10,310,841 தொகை மீண்டுவரும் செலவினமாக கணக்கு வைத்ததன் காரணமாக, அந்த அளவில் ஆண்டில் பற்றாக்குறை மற்றும் கட்டிடங்களின் பெறுமதி முறையாக அதிகமாகவும் குறைவாகவும் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. | இந்த இரண்டு கருத்திட்டங்களின் செலவினத்தின் இயல்புபடி மூலதன செலவினமல்ல என்பதுடன் கட்டண இயல்பிலான செலவினமாகும். | மீண்டுவரும் மற்றும் மூலதன இயல்பிலான செலவினங்களை சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (இ) சொத்துக்களை சரியாக வகைப்படுத்தி கணக்கிடாமை காரணமாக ஆண்டுக்கான தேய்மானம் மற்றும் ஆண்டின் பற்றாக்குறை ரூபா.1,344,012 படி குறைவாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆண்டில் செவ்வையாக்கப்படும். | நிலையான சொத்துக்களை செவ்வையான வகைப்படுத்தலின்கீழ் கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஈ)நிதிக் கூற்றுகள் பிரகாரம் பிற்போடப்பட்ட கற்கைநெறி வருமானம் உரிய அட்டவணைகளுடன் ஒப்பிடுகையில் ரூபா. 14,565,700 தொகை இணங்காமை அவதானிக்கப்படினும், அந்த வேறுபாடு கணக்காய்வில் தெளிவுபடுத்தவில்லை. | வருமானம் ரூபா. 14,565,700 ஐ அதிகமாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். | பேரேடுகள் மற்றும் அட்டவணைகளை ஒப்பிடப்பட்டு சரியான பெறுமதிகளை நிதிக் கூற்றுகளில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (உ) கணக்காய்வின் கணிப்பீடு பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா. 237,168,553 ஆதல் வேண்டுமாயினும், நிதி செயலாற்றுகை கூற்றின்படி | வட்டி வருமானம் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய வட்டி வருமானம் அதிகமாக கணக்கிடப்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன். 2020 கணக்கு- | ஆண்டுக்கான வட்டி வருமானம் சரியாக கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |

| | |
|---|---|
| அந்த மீதி ரூபா. 237,943,303 என்று காண்பிக்கப்பட்டுள்ளதால் ஆண்டின் வட்டி வருமானம் மற்றும் கிடைக்கப்பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா. 774,750 ஆல் அதிகமாக நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | களை தயாரிக்கையில் செவ்வையாக்கப்படும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 கிடைக்கப்பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 33 அலுவலர்களிடம் வழங்கியிரந்த 01 ஆண்டு தொடக்கம் 32 ஆண்டுகள் வரை பழைமையான மொத்தம் ரூபா.931,255 ஆன கடன் மீதி அறிவிடப்படவில்லை. | ஒரு நபர் பொருட்டு நினைவூட்டல் அனுப்பி வைத்தல், சேமலாப நிதியம்மூலம் பெற்றுக்கொள்ளுதல் என்பவற்றுக்கு கடிதங்கள் அனுப்புதல் போன்ற செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | கடன் தொகை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 104 | பல்கலைக்கழக அலுவலகங்கள் அடங்கலாக 05 பிரிவுகளில் 14 வகைப்படுத்தலின்கீழ் 52 அலகுகளுக்கான பொருட்கள் காணாமல் போயுள்ளதாக, 2018 பொருட் மீளாய்வு அறிக்கை மூலம் வெளிப்படுத்திக் கொண்டிருப்பினும், அது தொடர்பாக நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | பூங்கா நிருவாகப் பிரிவில் ஏற்பட்ட 26 உருப்படிகளின் களவாடல் தொடர்பாக ஏற்புடைய விசாரணை மேற்கொள்வதுடன், பதிவழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) 1978 ஆண்டு 16 இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் 26 பிரிவு | ஸ்ரீபாலி மண்டபம் என்ற பெயரில் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு இணைத்து மண்டபம் தாபிக்கப்பட்ட போதிலும், குறித்த பிரிவு பிரகாரம் ஒழுங்குவிதிகளை தயாரித்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. | ஸ்ரீபாலி மண்டபம் பொருட்டு பிரிதாக ஒழுங்குவிதி இல்லை என்ற போதிலும் 1995.11.07 வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானியில் விசேட ஒழுங்குவிதிமூலம் மண்டப சபையின் அமைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளை தயாரித்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுதல் வேண்டும். |

(இ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) XII அத்தியாயத்தில் 2.1.3 பிரிவு | பல்கலைக்கழக ஆசிரியர் ஒருவர் அல்லது அலுவலர் ஒருவர் பட்டப்படிப்பு கற்பவராக இருக்கும்போது அந்த பரீட்சையின் பொருட்டு பல்கலைக்கழகத்தின் அலுவலர் ஒருவர் அல்லது ஆசிரியர் ஒருவர் பரிசோதகராக நியமனம் பெறுதலாகாது என்ற போதிலும், 2016-2019 காலவெல்லைக்குள் கல்வி பீடம்மூலம் நடாத்தியிருந்த முழுநேர கால பட்ட நிலை பின் படிப்பு கற்கைநெறிகளின் பொருட்டு கற்கை லீவுகளின்றி அந்த பீடத்தில் 10 ஆசிரியர்கள் பங்குபற்றியிருந்தனர். | பீடத்தில் காணப்படும் பணியாற்தொகுதியின் பற்றாக்குறை காரணமாக பீடத்தின் பணியாற்தொகுதி பல்கலைக்கழக சேவையில் ஈடுபடும் அதேவேளை, கற்கைநெறி கற்பதற்கு உயர் பட்டப் படிப்பு குழு மற்றும் பீட சபையால் அனுமதி வழங்கப்பட்டது. அவர்களின் சேவை பீடத்திடம் பெற்றுக்கொள்ளுதல் இந்த அனுமதி வழங்குவதன் பிரதான நோக்கமாகும். | பல்கலைக்கழகத்தின் தாபனவிதிக்கோவை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ii) XXII அத்தியாயம்11.1 | ஒழுக்காற்று விசாரணை மூலம் இறுதி தீர்மானம் மேற்கொள்ளும் வரை, இயன்ற வகையில் தொடர்ச்சியாக ஒன்றுகூடி 03 மாதங்களுக்குள் விசாரணை நடாத்தி முடித்தல் வேண்டுமாயினும், இரண்டு அலுவலர்களின் இரண்டு ஒழுக்காற்று விசாரணைகள் பொருட்டு 3½ ஆண்டுகளுக்கு அதிகமான காலம் சென்றுள்ளதால் அந்த காலப் பகுதியில் சேவை பெற்றுக்கொள்ளாது அரை நாட் சம்பளமாக ரூபா. 8,688,863 செலுத்தப்பட்டிருந்தது.<br>அதேபோன்று விசாரணைகளை வழிநடாத்துவதற்கு சட்டத்தரணிகள் மற்றும் விசாரணை அலுவலர்களின் பொருட்டு ரூபா.5,325,750 செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதி பெற்றுக்கொள்வதற்காக கவனிக்கத்தக்க அளவிலான காலம் செல்லுதல் அடங்கலாக பல்வேறு காரணங்களின் மீது ஒழுக்காற்று விசாரணைகள் தாமதமடைந்தன. ஒழுக்காற்று விசாரணகைளின் நடவடிக்கைகள் கூடிய விரைவில் முடிவுறுத்துவதற்கு பல்கலைக்கழகத்தால் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளமை, தாபன விதிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கூடிய விரைவில் மற்றும் எந்தவொரு தரப்புக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை குறிப்பிடுகின்றேன். | பல்கலைக்கழகத்தின் தாபன விதிக்கோகவை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (iii) II பகுதியில் 33 அத்தியாயம் | பதிவாளர் ஒருவர் அடங்கலாக 16 ஆசிரியர்களால் கல்வி கற்கைநெறிகள், கலாநிதி மற்றும் பட்ட நிலை பின் படிப்பு | இதில் 09 ஆசிரியர்கள் 2020 ஆண்டில் கலாநிதி பட்டம் பூர்த்தி செய்துள்ளதுடன், 06 பேர் ஆராய்ச்சிக் கட்டுரைகள் | பல்கலைக்கழக தாபன விதிக் கோவைபடி நடவடிக்கை மேற்கொள்ளுதல் |

| | | | |
|---|---|---|---|
| | கற்கைநெறிகளை கற்பதன் பொருட்டு 06 மாதங்கள் தொடக்கம் 03 ஆண்டுகள் வரையிலான காலப் பகுதிக்கு சம்பளத்துடன்கூடிய கற்கை லீவு பெற்றுக்கொண்டிருப்பினும், உரிய கற்கைநெறிகளை பூர்த்தி செய்யவில்லை. உடன்படிக்கைகளை மீறியதன் காரணமாக அவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா.39,991,773 ஆன பிணை உடன்படிக்கை அறவிடப்படவில்லை. அதேபோன்று மேற்படி 05 ஆசிரியர்களிடம் பல்வேறு கருத்திட்டங்கள் மற்றும் கல்வி பிரிவுகள்மூலம் மொத்தம் ரூபா .3,923,588 ஆன நிதி உதவி வழங்கப்பட்டிருப்பினும், அந்த பணத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா.788,008 தொடர்பில் சட்டத்துடனான நடவடிக்கை மேற்கொள்ளுதல் பல்கலைக்கழகத்திற்கு பயனற்றதென நிருவாக சபை தீர்மானித்துள்ளதுடன், ஏனைய ஆசிரியர்களிடம் தவணையாக பணம் அவிடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. | வேண்டும். |
| (ஈ) 2016 மார்ச் 01 திகதிய 04/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபத்தில் பந்தி 2 | நிறுவனமொன்றில் எல்லா தன்னியக்க நிதி செயற்பாடுகளின் செலவு உள்ளடங்கும் வகையில் (Cost recovery) மற்றும் இலாபம் கிடைக்காத அடிப்படையில் (Nonprofit Basis) ஆதல் வேண்டுமாயினும், 08 கருத்திட்டங்கள் மற்றும் கறகைநெறிகளில் வருமானம் விஞ்சி மொத்தம் ரூபா.2,427,377 ஆன செலவினம் மேற்கொண்டிருத்தல் மற்றும் முடிவடைந்திருந்த 15 கற்கைநெறிகளின் மொத்தம் ரூபா.15,337,834 ஆன மிகை பணத் தொகை 01 ஆண்டு தொடக்கம் 07 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதி பயனற்று இருந்ததென அவதானிக்கப்பட்டது. | ஆங்கில கற்கைநெறிகளின்கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா .947,565 ஆன பெறுமதி 2020 ஆண்டில் செவ்வையாக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய கற்கை நெறிகளின் மீதிகளில் மொத்தம் ரூபா.15,337,834 ஆன பெறுமதி 2020 ஆண்டில் செவ்வையாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றுநிருபங்களுக்கு ஒழுங்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) 1996 யூன் 20 ஆந் திகதிய 928/1 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பு | ஸ்ரீபாலி மண்டபத்திற்கு 02 கல்வி பீடங்களை தாபிக்காது, 02 கல்விப் பிரிவுகளின் பொருட்டு பட்டப் படிப்பு கற்போர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தது. | பீடங்களை தாபிப்பதற்கு ஏற்புடையதான பிரேரணை தயாரித்து அனுமதி பெற்றுக்கொள்வதற்காக அங்கீகரிப்புச் சபை மற்றும் நிருவாக சபையிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும், மனித மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறை காரணமாக அங்கீகரிப்புச் சபையால் அந்த பிரேரணை பரிந்துரை செய்யப்படவில்லை. | வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டு 24 ஆண்டுகள் சென்றிருப்பதால் கற்கை பீடங்களை துரிதமாக தாபிப்பதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா.696,404,210 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் மிகை ரூபா. 283,376,914 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 979,781,124 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழச்சியடைதலுக்கு பணிக்கொடை கொடுப்பனவுக்காக ஒதுக்கீடு செய்யும் தொகையின் அதிகரிப்பு பிரதான காரணமாக அமைந்துள்ளது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழில்பாட்டு விணைதிறனின்மை

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கலை பீடத்தின் சிங்களம் மற்றும் சமூகவியல் திணைக்களத்தின் கீழ் பேணிச் செல்கின்ற நூலகங்களிலிருந்து ஆசிரியர்கள் வெளியில் எடுத்துச் சென்ற 77 புத்தகங்கள் 02 ஆண்டுகள் தொடக்கம் 05 ஆண்டுகள் வரையிலான காலப் பகுதி மீள கையளிக்கப்படவில்லை என்பதுடன், காணமல் போயிருந்த 186 புத்தகங்கள் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொண்டிருக்கவில்லை. | 186 புத்தகங்கள் தொடர்பாக மேற்கொள்கின்ற பரிசோதனையின் பெறுபேறுகள் விரைவாக வழங்கப்படுவதாக சனசமூகவியல் திணைக்களத்தின் பிரிவுத் தலைவர்கள் அறிவித்துள்ளார்கள் | புத்தகங்களை எடுத்துச் செல்லுதல் தொடர்பாக தற்போதுள்ள முறைமையை மேம்படுத்த வேண்டுமென்பதுடன், காணமல் போயிருந்த புத்தகங்கள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) ஸ்ரீபாலி மண்டபத்தின் கல்வி கற்கும் மாணவர்களின் பொருட்டு தற்போதுள்ள போதனா மண்டபங்கள் பயன்படுத்துவதற்கு | மண்டபத்தில் உள்ள பழைமையான கட்டிடங்களை அடிக்கடி பராமரிக்க வேண்டுமென்பதுடன், மாணவர்களின் நடவடிக்கை- | தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் பௌ- |

| | | |
|---|---|---|
| பொருத்தமான நிலையில் இருக்-காமை, அரங்கத்திற்கு தேவையான அத்தியாவசிய பௌ-தீக வசதிகள் வழங்காமை, உள்-ளக வீதி முறைமை பழுதடை-ந்திருத்தல், தரத்துடன் கூடிய கல்வி பரிச்சயங்களுக்கு தேவை-யான ஒலிகூடம், கலையகங்கள், கறபுல செவிப்புல கலையகங்கள், முன் பயிற்சி மண்டபங்கள் மற்றும் மாணவர் விடுதிகள் போதியளவில் இல்லாமை அவதானிக்கப்பட்டது. | களின் பொருட்டு தேவையான கட்டிடங்களை நிருமாணிப்பதற்கு பிரேரணை தயாரிக்கப்படுகின்றது. வதிவிட வசதிகளை பெற்றுக்-கொள்வதற்கு பொருத்தமான ஆண் மாணவர்களின் பொருட்டு ரூபா.3,500 ஆன மாதாந்த மாணவர் மானியம் செலுத்தப்பட்டுள்ளது. | தீக வளங்களை பெற்றுக்கொள்வதற் கும் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஒப்பந்த பெறுமதி ரூபா.272,915,895 ஆன முகாமைத்துவ மற்றும் நிதி கற்கை பீடத்தின் (West Wing Building) விஸ்தாரணம் செய்யும் கருத்திட்டத்தின் உடன்படிக்கை பிரகாரம் 2019 ஆகஸ்ட் 22 ஆந் திகதி வேலை முடிவுறுத்தப்ப-ட்டதாக சான்றிதழ் வழங்கியிரு-ப்பினும், அன்றைய திகதியில் கருத்திட்ட முகாமைத்துவ குழு அறிக்கை பிரகாரம் அடிப்படை ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்-டுள்ள முக்கியமான மூன்று உருப்படிகள் பூர்த்தி செய்ய-ப்படவில்லை. அதன்படி கருத்-திட்டத்தின் வேலை முடிவுறுத்தல் 2020 சனவரி 29 ஆந் திகதி வரை 130 நாட்களால் தாமத-மடைந்திருந்ததுடன், அதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா.15,425,670 ஆன தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட-வில்லை. | இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அலுவலர்களிடம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கை பிரகாரம் தாமதக் கட்டணம் அறவிடுதல் வேண்டும். |
| (ஆ) பல்கலைக்கழக நுழைவினை எதிர் பார்க்கும் அதிகமான மாணவ-ர்கள் இருக்கையில் பல்கலைக்க-ழகத்தில் 06 பீடங்களில் 2019 ஆண்டுக்காக ஆட்சேர்ப்புச் செய்ய முடியுமான மாணவர்க-ளின் கொள்ளளவையும் பார்க்க மாணவர்கள் 01 தொடக்கம் 12 வரையிலான எண்ணிக்கையில் குறைவாக ஆடசேர்ப்புச் செய்த-தன் காரணமாக 31 மாணவர்க-ளுக்கு பல்கலைக்கழக நுழைவு கிடைக்கப்பெறவில்லை. | பல்கலைக்கழகத்தின் எல்லா கற்கைநெறிகளின் பொருட்டும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் மாணவர்களை தெரிவு செய்து அனுப்பப்படுகிறது. அந்த எல்லா மாணவர்களும் பதிவு செய்வதில்லை என்பதுடன், இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. | தேவையான கூட்டி-ணைப்பு மற்றும் பின்னாய்வு நடவடிக்-கைகள் காலோசி-தமாக மேற்கொண்டு ஆற்றலுக்கு ஏற்ற வகையில் ஆட்சேர்-ப்புகளை மேற்-கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (இ)2019 திசெம்பர் 31 திகதியில் 33 நிதியங்களின் மொத்தம் ரூபா. 91,410,534 ஆன மீதி நிலவிய போதும் உரிய நிதியம்மூலம் எதிர்பார்க்கப்படும நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக மீளாய்விற்கான ஆண்டில் பயன்படுத்தியிருக்கவில்லை. | 33 நிதியங்களில் உள்ள ரூபா.112,410,534 மீதியை எதிர்வரும் ஆண்டுகளில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதியம் தாபிக்கும் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) ஸ்ரீபாலி மண்டபம் பொருட்டு நிதிசார் சுயாதீனம் இல்லாமை காரணமாக அதன் அலுவல்கள் பொருட்டு கொழும்பு பல்கலை-க்கழகத்தின் நிதிக் குழுவில் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளதால் தொழில்பாட்டு வினைத்திறமை குறைந்திருத்தல் அவதானிக்கப்பட்டது. மேலும் 2015 – 2018 காலவெல்லைக்காக பல்கலைக்கழகத்தால் ஸ்ரீ பாலி மண்டபம் பொருட்டு மேற்-கொண்ட மதிப்பிடப்பட்ட மீண்டு-வரும் செலவினங்களில் 89% தொடக்கம் 96% வரையிலான எல்லைக்குள் ஒதுக்கீடு திறை-சேரியிடம் கிடைக்கப்பெற்றி-ருப்பினும், 66% தொடக்கம் 83% வரையிலான எல்லைக்குள் ஒதுக்கீட்டு பணம் மட்டும் விடுவிக்கப்பட்டிருந்தது. | திறைசேரியால் ஒதுக்கீடு வழங்குகையில், சம்பளம் மற்றும் வேதனங்களுக்காக 100% ஆன ஒதுக்கீடு வழங்கப்படினும், ஏனைய மீண்டுவரும் மற்றும் மூலதன ஒதுக்கீடுகளின் பொருட்டு 100% வழங்கப்படுவதில்லை. | நிதிசார் வினைத்திறனை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஸ்ரீபாலி மண்டபம் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதி 163 மற்றும் உண்மையான பணியாற்தொகுதி 128 என்ற வகையில் காணப்பட்டதால் உண்மையான வெற்றிடங்களின் எண்ணிக்கை 35 ஆகும். அந்த வெற்றிடங்களில் முகாமைத்து-வத்தின் பிரதான பதவிகள் பூர்த்தி செய்யப்படாமையால் நிருவாக நடவடிக்கைகள் முறைசார்படு-த்தாமை அவதானிக்கப்பட்டது. | 2020 ஒக்டோபர் 20 ஆந் திகதியில் பணியாற்தொகுதியின் 31 வெற்றிடங்கள் உள்ளதுடன், அதில் பேராசிரியர் பதவி, 4 தற்காலிக உதவி விரிவுரையளார் பதவிகள், 2 தற்காலிக விரிவுரையாளர் பதவிகள் உள்ளடங்குகின்றன.<br><br>பல்கலைக்ககழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2019 நவம்பர் 26 ஆந் திகதிய HE/EST/01/0/UGC III ஆம் இலக்க கடிதம்மூலம் எல்லா கல்விசாரா பணியாற்தொகுதியின் ஆட்சேர்ப்புகளை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. | தேவையான பணியாற்தொகுதியினரின் ஆட்சேர்ப்புகளை துரிதப்படுத்தி வினைத்திறனை மேம்படு-த்தல் வேண்டும். |